1978 பிப்ரவரி 27]

*252 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஸ்டுடியோவில் 1976, 1977 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சினிமாப் படங்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அதற்கு ஏற்பட்டுள்ள செலவு எவ்வளவு?

(இ) தனிப்பட்டவர்கள் அரசு விழாக்களை படமெடுக்க அரசு அனுமதியைக் கோரி பெறவேண்டும் என்ற விதி ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) மற்றும் (ஆ):	எண்ணிக்கை.	செலவு.
அரசு ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்ட விளக்கப்படங்கள்.	9	ரூ. 2,99,770.

(இ) இல்லை.

*253 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டு அரசினால் தொடங்கப்பட்டுள்ள 'அரசு ஸ்டுடியோ' தற்போது இலாபகரமாக இயங்குகிறதா?

(ஆ) அதன் இன்றைய பணிகள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை. அரசு ஸ்டுடியோ துவக்கத்திலிருந்தே இலாபகரமாக இயங்கியதில்லை.

(ஆ) அரசு ஸ்டுடியோவில் திரைப்படப்பிடிப்பு முறையினைப் பற்றி மாணவர்களுக்கு செயற்முறை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு திரைப்படத் துறையின் விளக்கப்படங்களின் உள்புறப் படப்பிடிப்பிற்கும் இது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தனிப்பட்ட தயாரிப்பாளர்களின் படங்களின் உட்புற படப்பிடிப்பிற்கும் இது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தனிப்பட்ட தயாரிப்பாளர்களின் உட்புறப் படப்பிடிப்பிற்கும் இதனில் வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன.